திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? நிதிவசதி அதிகமாக இல்லாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, குடிநீர்த் திட்டத்தை அரசு செய்து தருமா ?

(விடை இல்லை.)

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்திற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெறுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிச் செய்யாமல், பொதுமக்களிடமிருந்தே கடன் எழுப்பி இந்த நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வருவதை விட்டுவிட்டு வம்புக்குச் செல்ல வேண்டியதில்லை. (சிரிப்பு).

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் சப்ளை செய்வது சம்பந்தமாக, சில பஞ்சாயத்துக்களில் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் என்கிற அளவில் அதிகப்படியான தொகையைக் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. சில பஞ்சாயத்துக்களால் அந்தத் தொகையைக் கட்ட முடியவில்லை. ஆகவே, இன்வெஸ்டிகேஷன் சார்ஜையும் இந்தத் திட்டத்துடன் சேர்த்து, அதையும் கடனாகச் சேர்த்துக்கொண்டு, குடிதண்ணீர் சப்ளையை பஞ்சாயத்துக்களுக்குச் செய்து தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த யோசனை பரிசீலிக்கப்படலாம் என்றாலும், இப்போதுள்ள நிதிநிலையில் அதைத் தீவிரமாகப் பரிசீலிப்பதற்கில்லை.

குடிநீர்த் திட்டங்கள்.

* 839 **வினா—திரு. கே. எ. வகாப்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி பேரூராட்சியில் குடிநீர், வீட்டுக்குழாய் இணைப்புக்கு அளவு மானி (மீட்டர்) வைக்க வேண்டுமென்று பொது சுகாதாரத் துறை சூப்பரின்டென்டிங் என்ஜினீயர் வற்புறுத்தியுள்ளாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வந்தவாசியில் வசிக்கும் மக்கள் ஏழைகளாகவும், பாய்முடைபவர்களாகவும் இருப்பதால் குடிநீர்த்திட்டத்தின் கீழ் வீட்டிணைப்புகளுக்கு அளவுமானி வேண்டாமென்றும், குழாய் ஒன்றுக்கு மாத சராசரிக் கட்டணமாக ரூ. 7 வசூலிக்க அனுமதிக்கும்படியும், வந்தவாசி பேரூராட்சித் தலைவர் அவர்கள் சென்னை பொதுப் சுகாதாரத்துறை மேற்பார்வை பொறியாளர் அவர்களை கடிதமூலம் கேட்டிருந்தார்கள்.

இந்த விஷயத்தை ஆராய்ந்து மேற்பார்வைப் பொறியாளர் குடிநீர்த்திட்டம் வெற்றி பெற, வீட்டிணைப்புகள் அதிகம் கொடுத்துப் பேரூராட்சியின் வருமானத்தைப் பெருக்க வீட்டிணைப்புகளுக்கு அளவுமானி (மீட்டர்) அமைத்தல் அவசியமென்று வற்புறுத்தியுள்ளார்.

பேரூராட்சித் தலைவர் அவர்களின் வேண்டுகோளையும் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களின் பதிலையும் ஆராய்ந்து வந்தவாசி குடிநீர்த்திட்டத்தின்கீழ் வீட்டிணைப்புகளுக்கு அளவு மானி அமைத்தல் பற்றி பேரூராட்சியை வற்புறுத்த வேண்டாமென்றும், குழாய் ஒன்றுக்கு மாத சராசரி கட்டணமாக ரூ. 7 வசூலிக்க பேரூராட்சியை அனுமதிக்கலாமென்றும் தலைமைப் பொறியாளர் அவர்களால் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, தண்ணீர் அளவு மானிக்கட்டணமாக ஒவ்வொரு முனிசிபாலிட்டியும் ஒவ்வொருவிதமாக கட்டணம் வசூலிக்கிறார்கள். திருப்பூரில் 7½ ரூபாயும், சிதம்பரத்தில் 1¼ ரூபாயும் வசூலிக்கிறார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் மாற்றி நமது மாநிலத்திற்குள்ளே இருக்கும் எல்லா இடங்களுக்கும் ஒரேமாதிரியான கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற நகரசபைகளின் நிலை, பொருளாதார நிலைக்கேற்ப வசூலிக்கப்படுகிறது. வந்தவாசி பேரூராட்சியில் ஏழை எளிய மக்கள், பாய்முடைபவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தண்ணீர் அளவுமானிகூட இல்லாமல் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 7 ரூபாய் கட்டணமாக வசூலித்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மீட்டர் பொருத்தினால்தான் குடிநீர்க்கான கட்டணத்தைச் சரியாக வசூலிக்க முடியும். ஒவ்வொரு வீட்டிலும் கணக்கில் வராமல் மூன்று, நான்கு குழாய்கள் என்று இருக்கின்றன. அவர்கள் ஒரு குழாயை மட்டும் கணக்கில் காட்டி பணம் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, புதிதாக ஏற்றுக்கொள்கிற எந்த இடமாக இருந்தாலும், சிறுசிறு குழாய் அமைத்தாலும் மீட்டர் பொருத்தும்படி வற்புறுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது யோசிக்கப்படலாம். வற்புறுத்துவது, வலியுறுத்துவது என்பது பின்னர் யோசிக்கப்படும்.

* 840 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த சிறுமுகை குடிநீர்த் திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறுமுகை குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடுகளுக்கு அரசு தனது 12—4—1971-ஆம் தேதிய 1175-ஆம் எண் ஆணையில் 27 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியைச் சேர்ந்த சிறுமுகை குடிநீர்த்திட்டம் ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. அது முயல் வேகத்தில் நடைபெற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?